# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!

6 ஆம் பக்கத் தொடர்ச்சி

`ஒரு கோடி பேரை சேர்த்து விட்டோம்' என்றுச் சொன்னார்கள். அதன் தொடர்ச்சியாகத்தான் இன்று பிஸ்கட் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். மும்மொழி தேவையில்லை என்ற விழிப்புணர்வை மக்களிடம் நீங்கள் ஏற்படுத்த வேண்டும்.

அவர்களுக்குக் கையெழுத்து போட்டது தமிழ்நாட்டு மக்களுக்கு யாரென்று நன்றாகத்தான் தெரியும். கையெழுத்து இயக்கம் நடத்தியவர்கள் தயவுசெய்து, அவர்களின் முகவரியோடு அவர்களைப் பற்றிய பட்டியலைத் தந்துவிடுங்கள். தமிழ்நாட்டு மக்கள் அவர்களைப் பார்த்துக் கொள்வார்கள். இன்றைக்கு காலையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். அந்தக் கையெழுத்து இயக்கத்தில் அ.தி.மு.க-வின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் கையெழுத்துப் போட்டு விட்டார். உடனே, எடப்பாடி பழனிசாமிக்கு, அது எப்படி என்ன கேட்காமல் கையெழுத்துப் போடலாம் என்று கோபம் வந்துவிட்டது.

**நிலைமை என்ன ஆகியிருக்கும்?**

இன்றைக்கு அ.தி.மு.க. ஆட்சியில் இருந்து, ஒன்றிய அரசு இதேபோல் மும்மொழிக் கொள்கையை எடுத்து வந்திருந்தால், தமிழ்நாட்டின் நிலைமை என்ன ஆகியிருக்கும்? `ஜீ தமிழ்நாட்டுக்குப் பணம் எல்லாம் தேவையில்லை. நாங்களே டெல்லிக்கு வந்து கேட்ட இடத்தில் கையெழுத்துப் போட்டு தருகிறோம்' என்று சொல்லியிருப்பார்கள். அடிமை அ.தி.மு.க. ஆட்சி, பா.ஜ.க-விடம் தமிழ்நாட்டின் உரிமைகள் ஒவ்வொன்றையும் இப்படித்தான் விட்டுக் கொடுத்தது. தமிழ்மொழியை வளர்க்க போகிறோம் என்று இன்றைக்கு ஒன்றிய அமைச்சர் அவர்கள் சென்னைக்கு அருகில் ஒரு கூட்டத்தில் வந்து பேசியிருக்கிறார். அவரைப் பார்த்து ஒரேயொரு கேள்வியைத்தான் கேட்கிறேன். கடந்த 10 வருடத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு செத்த மொழி சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்காக ஒதுக்கிய நிதி 2,500 கோடி ரூபாய். ஆனால், நம் தாய்மொழி தமிழ் வளர்ச்சிக்கு கொடுத்த நிதி 167 கோடி ரூபாய்தான்.

இதிலிருந்து உங்களுக்குத் தெரிந்திருக்கும் ஒன்றிய அரசின் திட்டம் என்னவென்று. இந்தியைத் திணித்து அதன் பிறகு சமஸ்கிருதத்தை கொண்டு வரலாம் என்று நினைக்கிறார்கள். எனவே, இந்தித் திணிப்பிற்கு எதிராகக் கடுமையாக போராட வேண்டிய களச் சூழல் இன்று வந்திருக்கிறது.

இன்னொரு பெரிய பிரச்சினை தொகுதி மறுவரையறை. மக்களவைத் தொகுதிகளை மறு வரையறை செய்யப் போகிறோம் என்று புதிய ஆயுதத்தை ஒன்றிய பா.ஜ.க அரசு கொண்டு வந்திருக்கிறது. இதன் ஆபத்து என்னவென்று உங்களுக்குப் புரிந்திருக்கும். மக்கள் தொகை அடிப்படையில் மக்களவைத் தொகுதிகளை நிர்ணயிக்கப் போகிறோம் என்பதுதான் ஒன்றிய அரசின் திட்டம். அப்படிச் செய்தால் மக்கள்தொகைக் கட்டுப்பாடு திட்டத்தைச் சிறப்பாக செய்த தமிழ்நாடு தண்டிக்கப்படுகிறது. ஏற்கனவே 39 நாடாளுமன்றத் தொகுதிகள் தமிழ்நாட்டில் உள்ளன. ஒட்டுமொத்தமாக இந்தியாவில் இருக்கின்ற நாடாளுமன்ற இருக்கைகளின் எண்ணிக்கை 543.

**20 கோடியைத் தாண்டி விட்டது**

இந்த தொகுதி மறுவரையறையைக் கொண்டு வந்தார்கள் என்றால், நம் தமிழ்நாடு கிட்டத்தட்ட 8 தொகுதிகளை இழந்துவிடும். ஆனால், உத்தரப்பிரதேசம் போன்ற வடமாநிலங்களின் மக்களவைத் தொகுதிகள் எண்ணிக்கை உயருகிறது. இதைத்தான் நாம் இன்று எதிர்த்து கொண்டிருக்கிறோம். குடும்பக் கட்டுப்பாடு திட்டம் என்பது ஒன்றிய அரசு சொன்னது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொன்னது ஒன்றிய அரசு. அதைச் சிறப்பாக செய்ததற்காக இன்றைக்கு தமிழ்நாட்டைத் தண்டிக்கிறார்கள். உதாரணத்திற்கு, உத்தரப் பிரதேச மாநிலத்தின் மக்கள் தொகை 20 கோடியைத் தாண்டி விட்டது. பீகாரின் மக்கள்தொகை 13 கோடியை தாண்டிவிட்டது. தமிழ்நாட்டின் மக்கள் தொகை ஏழு கோடிதான். நம்மைவிட அதிகமாக மக்கள்தொகை இருக்கின்ற மாநிலங்களுக்கு, அதிகமான நாடாளுமன்ற தொகுதிகளை ஒதுக்குவதற்காக இப்படியொரு திட்டம் போடுகிறார்கள்.

**அனைத்துக் கட்சிக் கூட்டம்**

அமித்ஷா அவர்களும், மோடி அவர்களும் ஒவ்வொரு நேரத்திலும் மாற்றி மாற்றி பேசுகிறார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்புகூட நாடாளுமன்றத்தில், தொகுதி மறுவரையறை நிச்சயமாக வரும், வடமாநிலங்களுக்கு அதிக தொகுதிகள் கிடைக்கும் என்று அமித்ஷா பேசியிருக்கிறார். அதற்காகத்தான் புதிதாகக் கட்டப்பட்ட நாடாளுமன்றத்தை 888 இருக்கைகளோடு கட்டியிருக்கிறார்கள். அதேபோல பிரதமர் மோடி அவர்களும், 2023-ஆம் ஆண்டு தெலுங்கானாவில் பேசும்போது, தொகுதி மறுவரையறை வந்தால், தென்னிந்தியா நூறு தொகுதிகளை இழக்கும் என்று பேசியிருந்தார்.

நேற்று முன்தினம் கூட, நம் முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, இந்த தொகுதி மறுவரையறையை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று ஒரு சிறப்பான தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். அதிலும்கூட, அ.தி.மு.க இரட்டை வேடம் போட்டது. நானும் அந்தக் கூட்டத்தில் இருந்தேன்.

கூட்டத்தில் பங்கேற்று அ.தி.மு.க. சார்பில் பேசிய முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் அவர்கள், அந்த தீர்மானத்தை ஆதரித்து, தமிழ்நாடு அரசும், முதலமைச்சரும் சரியான நேரத்தில் இந்த முடிவை எடுத்திருப்பதாகப் பாராட்டினார். ஆனால், வெளியில் வந்து பத்திரிகையாளர்களை சந்தித்து, இந்த அரசு கபட நாடகம் ஆடுவதாக மாற்றிப் பேசினார். அது வேறொன்றும் இல்லை, அவர்களின் முதலாளியான பா.ஜ.க.-வை நாம் விமர்சிப்பதால் வருகிற கோபம்தான்.

ஆனால், நம் முதலமைச்சர் அவர்களின் நிலைப்பாட்டைப் பார்த்து, இன்றைக்கு கர்நாடகா, தெலுங்கானா, கேரளா போன்ற மாநிலங்களும் தொகுதி மறுவரையறை திட்டத்தை எதிர்த்து வருகிறார்கள். ஆகவே நம் தலைவர் அவர்கள்தான், இன்றைக்கு இந்தியாவுக்கே கலங்கரைவிளக்கமாகத் திகழ்ந்து கொண்டு இருக்கிறார். ஆறு மாதங்களுக்கு முன்பு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள், எந்தக் காலத்திலும் பா.ஜ.க.வுடன் கூட்டணி கிடையாது என்று சொன்னார். ஆனால், சென்ற வாரம் பேசும்போது, எதுவாக இருந்தாலும் ஆறு மாதத்திற்குப் பிறகு பேசிக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்.

**இப்படி மாற்றி சொல்கிறாரே**

நேற்று முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு அவர்களிடம், பா.ஜ.க. கூட்டணி குறித்து எடப்பாடி பழனிச்சாமி இப்படி மாற்றி சொல்கிறாரே என்று என்று பத்திரிகையாளர்கள் கேட்கிறார்கள். அதற்கு அவர், "என்றைக்கோ ஒருநாள் நாம் சாகப் போகிறோம்; அதற்காக நாளைக்கே சுடுகாட்டுச் சென்று படுத்துக்கொள்ள முடியுமா?" என்று கூறியுள்ளார்.

இது என்ன பதிலென்று யாருக்காவது தெரிந்ததா? என்றைக்கு இருந்தாலும் கூட்டணி வைக்கத்தான் போகிறோம். என்றைக்கு இருந்தாலும், அழியத்தான் போகிறது. அதற்காக இன்றைக்கே கூட்டணியில் போய் சேரமுடியுமா? நாங்கள் தேர்தல் நேரத்தில் சொல்வோம் என்று சொல்லி இருக்கிறார். ஆகவே, அடிமைகளும், அவர்களது எஜமானர்களும் நிச்சயமாக ஒன்றாகத்தான் வரப்போகிறார்கள். இருவரையும் ஒன்றாக துரத்தி அடிப்பதற்கு சுலபமான வாய்ப்பை ஏற்படுத்தி தரப்போகிறார்கள். எனவே, வெற்றி நிச்சயம் நமக்கு. அதற்காக, களத்தில் சுலபமாக எடுத்துக் கொள்ளாமல், கடுமையாக உழைக்க வேண்டும்.

நம் அரசின் சாதனைகளை தினந்தோறும் மக்களிடம் எடுத்துச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

2026-ஆம் சட்டமன்ற தேர்தலில் 'வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு' என்று நம் தலைவர் இலக்கு நிர்ணயித்துள்ளார். அதற்கு நாம் 200% உழைத்தாக வேண்டும். அதற்கான பணியை இன்றிலிருந்து நீங்கள் தொடங்க வேண்டும். 200 தொகுதிகள் இல்லை, அதற்கும் மேல் நம் கழகம் வெற்றி பெற வேண்டும். அதற்கு இளைஞர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள் உங்களின் பணியும் மிக மிக அவசியம். அதை மனதில் வைத்துக்கொண்டு செயல்படுங்கள்.

2026-ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் இந்த திருவாரூர் மாவட்டத்தில் உள்ள திருவாரூர், மன்னார்குடி, நன்னிலம், திருத்துறைப்பூண்டி ஆகிய நான்கு தொகுதிகளிலிருந்து எண்ணிக்கை தொடங்க வேண்டும். அந்த நான்கு தொகுதி வெற்றியை நீங்கள் உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கழகம் ஏழாவது முறையாக கழக ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், நம் தலைவர் இரண்டாவது முறையாக தொடர்ந்து முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும் என்றால் நீங்கள் அனைவரும் இன்றிலிருந்து தேர்தலுக்காக உழைக்க வேண்டும்.

**களத்தில் எப்போதும் முதல் அணி**

நம் இளைஞர் அணிதான் களத்தில் எப்போதும் முதல் அணியாக இருக்கும் என்று எப்போதுமே, தலைவர் சொல்வார். அது போராட்டமாக இருந்தாலும் சரி, ஆர்ப்பாட்டமாக இருந்தாலும் சரி, மாநாடாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் எப்போதும் களத்தில் நின்று அதை நிரூபிக்க தலைவர் அவர்கள் இன்னொரு வாய்ப்பு கொடுத்து இருக்கிறார். அதை நிரூபித்து காட்ட வேண்டும். அதற்கு இளைஞர் அணி இன்னும் ஒரு வருடம் கடுமையாக உழைக்க வேண்டும். வந்திருக்கின்ற புதிய நிர்வாகிகள் உங்கள் அத்தனைப்பேருக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளை தெரிவித்து, நாம் தொடர்ந்து இனிமேல் அடிக்கடி சந்திப்போம்.

வந்திருந்த அத்தனை நிர்வாகி களுக்கும் நன்றியைத் தெரிவித்து, இந்த சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த இளைஞர் அணி நிர்வாகிகளுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் பூண்டி கலைவாணன் அவர்களுக்கும், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி அவர்களுக்கும், வந்திருக்கிற அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கலைவாணன், நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் இளையராஜா, ஆனந்தகுமார், கழக செய்தித்தொடர்புக் குழுவின் துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, விக்னேஷ் ஆனந்த், தலையாமங்கலம் பாலு, கலைவாணி மோகன், சோழராஜன், நகர கழகச் செயலாளர்கள் வீர கணேசன், ஆர்.எஸ். பாண்டியன், வாரை எஸ்.பிரகாஷ், எஸ். வி.பக்கிரிசாமி, பேரூர் கழகச் செயலாளர்கள் ராஜசேகரன், சிவனேசன், எம். எஸ்.கார்த்திக், பக்கிரிசாமி, ஏ.கே.டி. சேரன், சிவதியாகு, பூண்டி கலைவேந்தன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பனங்குடி குமார், உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

## கழக தலைவர் – முதல்வர் 72–வது பிறந்தநாளை முன்னிட்டு

# நீலகிரி மாவட்டத்தில் தொடர் பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள்!

## மாவட்டக் கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு அறிவிப்பு!


*நீலகிரி, மார்ச் 9-*

கழக தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் 72-வது பிறந்தநாளை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்தில் பொதுக்கூட்டங்கள் மற்றும் தெருமுனை பிரச்சார கூட்டங்கள் கீழ்குறிப்பிட்டுள்ள பட்டியல்படி தொடர்புடைய நகர- ஒன்றிய கழக அமைப்புகள் சார்பில், தலைமை கழக சொற்பொழிவாளர்கள் சிறப்புரையாற்ற நடைபெற உள்ளது என மாவட்டப் பொறுப்பாளர் கே.எம். ராஜு அறித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:

**பொதுக்கூட்டங்கள்**

*17.3.2025* குன்னூர் நகர கழகம் வி.பி.தெரு, குன்னூர் காவேரிபட்டினம் இளையராஜா, *18.3.2025* உதகை நகர கழகம் ஏ.டி.சி சுதந்திர திடல்,



உதகை கந்திலி கரிகாலன், *22.3.2025* குன்னூர் ஒன்றிய கழகம் சேலாஸ் தமிழ்கொண்டான், *23.3.2025* உதகை வடக்கு ஒன்றிய கழகம் கூக்கல் தொரை கோவை துரை முருகன், *24.3.2025* கோத்தகிரி ஒன்றிய கழகம் மார்கெட் திடல் சேலம்சுஜாதா ஆடுதுரை உத்திராபதி, *25.3.2025* மேலூர் ஒன்றிய கழகம் தூதூர்மட்டம் திருப்பூர் கூத்தரசன், *30.3.2025* கூடலூர் நகர கழகம் காந்தி திடல், கூடலூர் சேலம் கோவிந்தன், *30.3.2025* கீழ்கோத்தகிரி ஒன்றிய கழகம் கீழ் கோத்தகிரி பசும்பொன் ரவிசந்திரன்,

**தெருமுனை பிரச்சார கூட்டங்கள்**

*12.3.2025* பந்தலூர் கிழக்கு ஒன்றிய கழகம் குந்தலாடி நெலாக்கோட்டை பிதர்காடு பாக்கனா பஜார் தா.பழூர் இளஞ்செழியன், *16.3.2025* பந்தலூர் மேற்கு ஒன்றிய கழகம் ஒன்றிய பகுதி முழுவதும் பவானி கண்ணன், *20.3.2025* கூடலூர் ஒன்றிய கழகம் மசினகுடி பாட்டவயல் எழும்பூர் கோபி, *25.3.2025* உதகை தெற்கு ஒன்றிய கழகம் ஒன்றிய பகுதி முழுவதும் போடி காமராஜ், *30.3.2025* நெல்லியாளம் நகர கழகம் நெல்லியாளம் பந்தலூர் உப்பட்டி நாடுகாணி முரசொலி மூர்த்தி,

மேற்கண்ட பொதுக் கூட்டங்கள் மற்றும் தெருமுனை கூட்டங்கள் அனைத்தும் எழுச்சியோடு நடைபெற தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் சம்மந்தப்பட்ட நகர கழக, ஒன்றிய கழக செயலாளர்கள் செய்வதோடு, கூட்டங்களில் அந்தந்த நகர, ஒன்றிய கழகங்களுக்கு உட்பட்ட அனைத்து கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு தெரிவித்துள்ளார்.

# ஒன்றியத்தில் எங்கள் திராவிட போர்க்குரல்!!

**எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற் கரிய செயல்**

கிடைப்பதற்கு அரிய காலம் வாய்க்கும் பொழுது அதைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செய்தற்கரிய செயலை செய்து முடிக்க வேண்டும் என்ற கூற்றிற்கு இணங்க அந்த காலமே வரலாற்று சரித்திரத்தில் ஒரு தலைவனை உலகிற்கு உருவாக்கிக் கொடுக்கும் அந்த வகையில் இந்த திராவிட மண்ணிற்கு ஒன்றிய ஆட்சியாளர்களால் அறிவிக்கப்படாத நவீன எமர்ஜென்சி போன்ற அடக்கு முறைக்கு எதிரான யுத்தம் தான் தன் பிறந்தநாளையே ஓர் போர் முழக்கமாக மாற்றிய காலம் தந்த உன்னத தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

**தென்னகம் காத்த திராவிடம் :**

தமிழ்நாட்டில் அன்றிருந்த பார்ப்பன ஆதிக்கத்தை முழுமையாக எதிர்த்து உருவாக்கப்பட்ட நீதிக்கட்சியின் அரசியல் பிரிவாக தென்னிந்திய நல உரிமைகள் சங்கம் செயல்பட துவங்கிய பின்பு 1919 ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசு மாநிலங்களுக்கு அதிக பொறுப்புகளை வழங்கியது. நீதிக்கட்சி அதை ஆதரித்து அன்றிருந்த ஆதிக்கத்தை உடைத்து சன நாயகத்தை நிலைநாட்டும் என்று திண்ணமாக நம்பியது.

நீதிக்கட்சி 19201923 ஆம் ஆண்டும் ஆட்சிக்கு வந்தது. திராவிடர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி பொதுத்துறைகளில் சாதி அடிப்படையிலான வேலை வாய்ப்பு ஒதுக்கீட்டை ஊக்குவித்தது, கல்வியை விரிவுபடுத்தியது.

சமத்துவம், சமூக நீதி, சுயமரியாதை மற்றும் பெண் விடுதலை ஆகிய சித்தாந்தங்களை கோட்பாடாகக் கொண்டு தந்தை பெரியாரின் முழுமையான வரவு நீதிக்கட்சி திராவிடர் கழகமாக புத்துணர்வு பெற்று பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும் தமிழகம் முழுவதும் மேடைப் பேச்சு, எழுத்து, பத்திரிகைகள், இசை, நாடகம் என்பவை மூலமாகவும், பின்னர் வலுவான தொடர்பு ஊடகமாக வளர்ந்து வந்த திரைப்படங்கள் மூலமாகவும் தங்கள் கொள்கைகளை பரப்பினர்.

**இளைஞர் படை தளபதி :**

திராவிட கொள்கையில் தளராதிருந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசியல் வாழ்க்கை மு.க. ஸ்டாலின் அவர்கள் மீதும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. 1968 ஆம் ஆண்டு கோபாலபுரத்தில் தனது நண்பர்களுடன் சேர்ந்து திமுக இளைஞர் அணியை நிறுவி தனது அரசியல் பயணத்தை முழு ஈடுபாட்டோடு தொடங்கினார். ஒரு சாதாரண முடிதிருத்தும் கடையில் இருந்து தொடங்கிய இளைஞர் அணி தனது அயராத உழைப்பினால் விரைவில் பிரபலமடைந்து தமிழகம் முழுவதும் கொண்டு சேர்த்து கழகத் தலைவர் அவர்களின் தலைமையின் கீழ் மாநிலம் தழுவிய நிகழ்வாக வளர்ந்தது. இளைஞர் அணியின் ஆரம்ப கட்டங்களில், தலைவர் அவர்களும் மற்ற கழக உறுப்பினர்களும் தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து, சக இளைஞர்களுக்கும் பாமர மக்களுக்கும் தீவிர அரசியலின் முக்கியத்துவத்தையும் வழிகாட்டுதல்களையும் மற்றும் பயிற்சியும் அளித்தனர். தனது முழுமையான அர்ப்பணிப்பையும் கடின உழைப்பையும் இளைஞர் அணியை தமிழக அரசியலில் ஒரு வலிமையான சக்தியாக மாற்ற உதவியது. வழியில் சவால்கள் மற்றும் பின்னடைவுகளை எதிர்கொண்ட போதிலும் தலைவர் அவர்கள் தனது திராவிட சித்தாந்த நெறியில் உறுதியாக இருந்தார், இளைஞர் அணியை வலுப்படுத்த அயராது உழைத்தார்.1983 முதல் 2018 வரை நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இளைஞர் அணிச் செயலாளராகப் பணியாற்றினார்.

**டாக்டர் ஆ.கா.தருண்**
துணைச் செயலாளர்,
தி.மு.க. - தகவல் தொழில்நுட்ப அணி.



**உயிருக்கு உறவோடு அன்பரியம் தோள் - தந்து;**
**கழத்தின் கடைக்கோடிக்கு புத்தொளி வீசினீர்!**
**பகுத்தறிவு எண்ணம் உயர்ந்தோங்கி மடைமை - குணம்**
**அழிக்க; தெளிவு வீறுநடை கொண்டீர்!**
**பாதச்சுவடு அறியா இடமும் கொள்கை - வளர்த்து**
**தமிழுக்கு முதலாய் தமிழகம் சேர்த்தீர்!**

**மிசா நாயகன் :**

தனது 22 வயது முடிந்திருந்த நிலையில் அவசரநிலை மற்றும் சிவில் உரிமைகள் இடைநிறுத்தப்படுவதற்கு எதிராக திமுக தீவிரமாக பிரச்சாரம் செய்து வந்தது தலைவர் அவர்களும் கட்சியின் இளைஞர் அணியில் முக்கிய உறுப்பினராக இருந்தார் என்பதையும் கவனத்தில் கொண்டு ஜூன் 30-1976 அன்று, திருவள்ளூரில் அவசரநிலைக்கு எதிரான ஒரு போராட்டப் பேரணியை கழகத் தலைவர் அவர்கள் தலைமை தாங்கியிருந்த நிலையில் போராட்டக்காரர்களை கலைக்க காவல்துறையினரால் பலவந்தமாகப் பேரணி களைக்கப்பட்டது. உள்நாட்டுப் பாதுகாப்பு பராமரிப்புச் சட்டத்தின் (MISA) கீழ் தலைவர் அவர்கள் கைது செய்யப்பட்டார்.

ஒரு வருடத்திற்கும் மேலாக மிசா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தார், அந்தக் காலத்தில் அவர் சிறையில் கடுமையான சூழ்நிலைகளுக்கு ஆளானார். சிறையில் இருந்தபோது, அவர் உடல் ரீதியான துன்புறுத்தலை எதிர்கொண்டார். அன்றைய ஒன்றிய அரசாங்கம் மிசாவைப் பயன்படுத்தி அதிருப்தியை நசுக்குவதாகவும் அரசியல் எதிர்ப்பை முடக்குவதாகவும் அமைந்திருந்தது. இந்த சவாலான சூழ்நிலைகள் இருந்தபோதிலும்,தனது திராவிட கொள்கையை தளரவிடாமலும் கல்வியைத் தொடர உறுதியாகவும் இருந்தார்.

**மடை திறந்த காட்டாற்றில் எதிரிகள் - பிடரியிட**
**மக்கள் வெள்ளம் அரவணைக்கும் - ஆதரவு கொண்டீர்**
**சித்தாந்தம் குழைக்கும் நோக்கம் எதிர்த்து - சிறைவாசம்**
**கொண்டும்; அயராத உதிரம் துடிந்தெழுந்து**
**அடக்கு முறைக்கு துளி அஞ்சாது - நிமிர்ந்த;**
**வீர முழக்கம் தமிழகம் எதிரொலித்தது**
**ஆற்றல் மெருகேற்றி உடன் பிறப்புகள் - படைசூழ**
**திராவிட அத்தியாயம் புத்தொளிப் பிறந்தது**

பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப்பட்டு அவசரநிலை நீக்கப்பட்ட பிறகு, 1977 இல் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார். சிறையில் அவரது அனுபவம் அவருக்கு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது, பின்னர் அவர் மனித உரிமைகள் மற்றும் சிவில் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் ஒருவராக ஆனார். ஒரு சாதாரண உறுப்பினராகத் தொடங்கி தனது கடின உழைப்பாலும் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வாலும் பல பொறுப்புகளை வகித்து அதனை

திறம்பட கையாண்டு கழகத் தோழர்களின் முதன்மை தொண்டனாக திமுகவின் தலைவராக உயர்ந்து இன்று தமிழ்நாட்டு மக்களுள் ஒருவராக முதலமைச்சர் ஆகியிருக்கிறார்.

**இந்தி திணிப்பும் - கொள்கை வீரனும் :**
**உலகத்து ஞாயிறாய் உதித்தீர் ஞான - செருக்காய்;**
**திராவிடனாய் வளர்ந்தீர் கொள்கை பிடிப்பாய்!**
**உயர்ந்து வளர்ந்த திராவிட ஆழத்தை - அளந்தீர்;**
**அஃது வேர்வரை முழுதாய் சுவாசித்தீர்**

1937ம் ஆண்டு மதராஸ் மாகாண முதல்வராகப் பொறுப்பேற்ற இராஜாஜி, 'இனி பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடமாக இருக்கும் என அறிவித்த நிலையில் தமிழகமெங்கும் இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தால் நடராசன், தாளமுத்து இருவரும் உயிரிழந்தனர். இதை தொடர்ந்து பிப்ரவரி 21ல் இந்தி கட்டாயம்' என்ற உத்தரவைத் திரும்பப் பெறப்பட்டது.

1965ம் ஆண்டு நடந்த மொழிப்போரில் திமுக பெரும் பங்காற்றியது.1965, ஜனவரி 27ம் தேதி 'தமிழ் வாழ்க, இந்தி ஒழிக' என்று கோசமிட்டபடியே திருச்சி ரயில்வே சந்திப்பு முன்னர் கீழ்ப்பழுவூர் சின்னசாமி தீக்குளித்து உயிர்த் தியாகம் செய்தார். பல மாணவர்கள், இளைஞர்கள், தமிழர்கள் மொழிப்போரில் தங்களது இன்னுயிர்களை நீத்தனர்.

1986ம் ஆண்டு பிரதமர் ராஜீவ் காந்தி இந்தியாவிலுள்ள மத்திய அரசு அலுவலகங்களுக்கு இனி புது டெல்லியிலிருந்து வரும் கடிதங்கள் இந்தியில் மட்டும்தான் வரும் என்றார்.மீண்டும் ஒரு மொழிப்போருக்கு இந்த அறிவிப்பு வித்திட்டது.இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 17வது பகுதியின் 343வது பிரிவின் நகலை, பொது இடங்களில் தீயிட்டுக் கொளுத்தும் நிகழ்வு பேராசிரியர் தலைமையில் நடைபெற்றது. இதனால் தி.மு.கழகத்தின் தலைவர்கள், ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் சிறைக்குச் சென்றார்.

**குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு.**

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும் எனும் வள்ளுவரின் கூற்றிற்கு ஏற்ப தலைவர் அவர்களின் தலைமையில் ஆகஸ்ட் 2021 இல், அனைத்து சாதியினரையும் சேர்ந்த பயிற்சி பெற்ற கோயில் அர்ச்சகர்களுக்கு HR & CE துறையின் நியமன ஆணைகளை அவர் வழங்கினார், கடவுளை நம்பும் அனைவருக்கும் வழிபாட்டில் சம உரிமைகளுக்கான பெரியாரின் போராட்டத்திற்கு தனது உறுதிப்பாட்டையும் பாசிச ஆச்சாரங்களுக்கு அதிர்ச்சியளிக்கும் திராவிட சிந்தாந்தத்தையும் நடைமுறை படுத்தியுள்ளார்.. அதே போல இருமொழி கொள்கையில் இந்தி திணிப்பிற்கு எதிராக அன்றிருந்து இன்று வரை திமுக கழகம் உறுதிபாட்டோடு இருந்து வருகின்றது.

**அடக்குமுறைக்கு அஞ்சாத அரசியல் போராளி :**
**ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்**
**தாக்கற்குப் பேருந் தகைத்து**

கொடுமைகளைக் கண்டும்கூட உறுதி படைத்தவர்கள் அமைதியாக இருப்பது அச்சத்தினால் அல்ல; அது ஆட்டுக்கிடா ஒன்று தனது பகையைத் தாக்குவதற்குத் தன் கால்களைப் பின்னுக்கு வாங்குவதைப் போன்றதாகும் என்ற வள்ளுவனின் கூற்றில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் உரை மொழிக்கு ஏற்ப தமிழகம் கண்ட இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டமானாலும், வேளாண் சட்டங்கள், குடியுரிமை திருத்தச் சட்டம், மாணவர்களுக்கான ஒன்றிய அரசின் கல்வி நிதியை முடக்குவதிலும், சரக்கு மற்றும் சேவை வரியில் தமிழ்நாட்டுக்கு பகிர்ந்தளிக்க வேண்டிய நிதியில் பாரபட்சம் காட்டுவதிலும், தென்மாநிலங்களை உறுகுலைக்க முறையற்ற தொகுதி மறுசீர் அமைப்பு போன்ற ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கும் ஆதிகத்திற்கும் மக்களுக்கு எதிரான சமூக நீதி, சமத்துவம் மற்றும் சுயமரியாதை உணர்வுகளை காயப்படுத்தும் ஒடுக்குமுறைக்கு அஞ்சாமல் தான் கொண்ட திராவிட சித்தாந்த கொள்கையில் தீர்க்கமாக இருந்து ஒன்றிய அரசின் மக்கள் விரோத செயற்பாட்டிற்கும் மக்கள் நலன் காக்காத அலட்சியங்களுக்கும் திராவிட மாநிலங்களுள் முதல் குரலாய் நம் கழகத் தலைவர் அவர்களின் குரல் தான் ஒன்றியத்தில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. சமூகநீதிக்கு எதிரான எளிய மக்களின் வாழ்வை சீர்குலைக்கும் ஒன்றிய அரசு நினைக்குமேயானால் நம் திராவிட தளபதி கழகத் தலைவர் தலைமையில் தமிழ்நாடு மற்றும் ஒருமித்த கருத்துடைய அண்டை மாநிலங்களும் ஓரணியில் திறளும் என்பதில் ஒன்றிய அரசுக்கும் மாற்று கருத்திருக்காது.

**மக்களில் ஒருவராய் மக்களுக்கு முதல்வராய் - ஆனீர்!**
**சரித்திரம் காட்டிடும் புத்தெழுச்சி திரண்டு**
**வானத்து சூரியனாய் தமிழகம் காத்து - வளர்க்கும்**
**நின்பின்னே ஞாலம் நிற்கும் நேரமிது!**

**நல்லாட்சி நாயகர் :**

நமது திராவிட மாடல் அரசின் மக்களைத் தேடி மருத்துவம்,தமிழகத்தின் முதல் வேளாண் நிதிநிலை அறிக்கை, இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48,

நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், மகளிர் உரிமை தொகை, விடியல் பயண திட்டம், முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை உருவாக்கி தமிழ்நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் தன் திட்டங்கள் மக்களிடத்தில் சென்று அந்த இல்லத்துள் ஒருவராய் இருக்கக்கூடிய கழகத் தலைவர் கழகத் தோழர்களுக்கு எல்லாம் குடும்ப தலைவராகவும், மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு எல்லாம் அன்போடு அப்பா என்று உரிமையோடு அழைக்கக்கூடிய உன்னத தலைவராகவும் உருவெடுத்திருக்கிறார் நம் கழகத் தலைவர்.

**வாழ்வு நெறி மொழி காட்டிட்டதோ**
**காழ்பு வழி அது அறுத்திட்டதோ**
**தீர்க்கும் பொருள் நீ தந்தாயோ**
**தீர்க்கம் மொழி அதை அடைவேனோ!**

நமது கழகத் தலைவர் அவர்கள் தமது பிறந்தநாளில் ஒன்றிய அரசின் அநீதிக்கும் மாநில அரசின் சுயாட்சியை நசுக்கும் நவீன எமர்ஜென்சிக்கு எதிராக முதல் குரலாய் ஒன்றியத்தில் நமது திராவிட போர்க்குரல் ஒலிக்கும் அந்த வகையில் இந்த ஆண்டு தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகவும் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச அரசை மக்களிடையே எடுத்துச் சொல்ல வேண்டிய ஒரு முன்னெடுப்பை கொடுத்து இருக்கிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அறிவித்த "உறுதி மொழி" ஒரே இலக்கு தமிழ்நாட்டின் நலனையும், எதிர்காலத்தையும், யாருக்காகவும் எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம்!

தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம்!

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!